DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 83/2023
Miscellaneous :
Sessions : DW2
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சந்திரசேகர் |
| Father / Husband Name | சிட்டன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **08.04.2026**

**முதல் விசாரணை:**

1. நான் இந்த வழக்கின் சாட்சி ஆவேன். என்னிடம் காட்டப்படும் நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

**2.** எதிரி மாலதி என்பவரை எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் சுமார் 20 வருடங்கள் ஆகும். நானும் எதிரியும் திருச்சி மாவட்டம் சீனிவாசநல்லூரை சேர்ந்தவர்கள் ஆவோம். புகார்தார் மற்றும் எதிரியின் வங்கி கணக்கு விவரங்கள் வழக்கு காசோலை மற்றும் அது திருப்பப்பட்டது குறித்த விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எப்போது புகார்தாரர் அனுப்பப்பினார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி புகார்தாரருக்கு எப்போது பதில் அறிவிப்பு அனுப்பினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தேதி தெரியாது. எதிரி மாலதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. எனது ஊர்காரர் ஆவார். எதிரிக்கு நண்பர்கள் யார் என்றும் அவர் யாரிடம் கடன் வாங்கினார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நானும் எதிரியும் ஒரே நிறுவனத்தில் வேலை செய்து வந்ததால் அவர் கடன் பெற்று மீண்டும் கடனை செலுத்திவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும்.

3. புகார்தாரரிடம் இருந்து எதிரி எனக்கு தெரியாமல் கடன் வாங்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எதிரி தனிப்பட்ட கடன் வாங்கிய விவரம் தெரிய வாய்ப்பு இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி ஜான்சி என்பவரிடம் எப்போது ரூபாய் 2 லட்சம் கடன் வாங்கினார் என்றால் 2017 ம் வருடம் மாதம் நவம்பர் அல்லது டிசம்பர் ஆக இருக்கலாம். தேதி தெரியவில்லை. எதிரி கடனை திருப்பி செலுத்திய தேதி என்னவென்றால் 2018 ஏப்ரல் மாதக் கடைசியாகும். எதிரி என் முன்னிலையில் கடனை பெற்று திரும்ப செலுத்தியதாக நான் கூறியுள்ளதால் எங்கு யார் முன்னிலையில் மேற்படி

கொடுக்கப்பட்டது என்றால் திருச்சி பீமன் நகர் செடல் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள ஜான்சி என்பவரின் வீட்டில் கடனை பெற்று திரும்ப செலுத்தப்பட்டது. நானும் மாலதியின் கனவரும் உடன் இருந்தோம். கடனை ஜான்சியிடம் திரும்ப செலுத்திய பிறகு அவரிடம் கொடுத்த வழக்கு காசோலையை திரும்ப கொடுக்க கோரி வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது காவல் நிலையத்தில் புகாரோ கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

4. ஜான்சி என்பவர் புகார்தார் ராஜா என்பவரிடம் காசோலை கொடுத்த விவரம் எவ்வாறு தெரியும் என்றால் எதிரி மாலதியின் கனவர் சொல்லிதான் எனக்கு மேற்படி விவரம் தெரியும். மேற்படி ஜான்சி என்பவரை இவ்வழக்கில் விசாரித்தால் உண்மை தெரிய வரும் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் ராஜா என்பவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் ராஜா மற்றும் எதிரிக்கும் இடையே நடந்த பண பரிவர்த்தனைகள் பற்றி எனக்கு தெரிய வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. ரூபாய் 650000 காசோலை தொகைக்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எதிரி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி அழைத்ததன் பேரில் தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கின் காசோலை மற்றும் அது திருப்பப்பட்ட விவரங்கள் அனைத்தும் எதிரி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

5. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன விவரங்கள் அனைத்தும் பொய் என்றாலும் எதிரி என் ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரி மற்றும் ஜான்சி என்பவருக்கு இடையே பண பரிவர்த்தனைகள் நடந்ததாக நான் சொன்னதற்கு எந்த ஆவணங்களும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். ஜான்சி என்பவருக்கும் எதிரிக்கும் எந்த பண கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிர்து இருப்பேன் என்றால் சரியல்ல. எதிரியுடன் தொடர்புடைய நபர்கள் அனைவரையும் எனக்கு தெரியும் என்று நான் சொல்வது நடைமுறை சாத்தியம் அற்றது என்றால் சரியல்ல. எதிரி மாலதியை இந்த வழக்கில் காப்பாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.